# தேவத்துவம் என்றால் என்ன?

*ரிச்சர்ட் C. டிரென்ச் அவர்களின், புதிய ஏற்பாட்டின் ஒரு பொருள் பல சொற்கள் என்ற தம்முடைய தரமான புத்தகத்தில், தெய்வீகத்தை முற்றிலுமாக விளக்கப்படுத்தும் புதிய ஏற்பாட்டின் வார்த்தையான theotes (கொலோ. 2:9)*[1] என்பது மட்டுமே ''தேவத்துவம்'' (AV, ASV), ''தெய்வீகத்துவம்'' (NASB, NIV), மற்றும் ''தெய்வீகம்'' (RSV) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இது *theos*, "தேவன்" "(நாம்) மன்றாடும் ஒருவர்'' என்பதிலிருந்து பெறப்பட்டுள்ளது என்ற கருத்தைக் கொண்டுள்ளார். "தேவத்துவம்'' என்ற சொற்றொடரில் பதிந்துள்ளது எவ்வளவு என்பதை எந்த மனிதரும் அறிவதில்லை. சோப்பார், யோபுவினிடத்தில், "தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வ வல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக் கூடுமோ?'' என்று அறைகூவல் விடுத்தார் (யோபு 11:7). "தேவ பக்திக்குரிய இரகசியமானது ... மகா மேன்மையுள்ளது" (1 தீமோ. 3:16) என்ற உண்மையைப் பற்றி யாரும் விவாதிக்க முடியாது என்று பவுல் எழுதினார். அவர் இந்த வாழ்வில் தேவனுடைய முழுமைத்துவத்தைப் புரிந்து கொள்ளுதல் பற்றிய செயலை எப்பொழுதுமாக விட்டு விட்டார்: "ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்" (ரோமர் 11:33).

இருந்தாலும், நடைமுறை அடிப்படையில் தேவன் தம்மைப் பற்றி நாம் அறிய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். அப்படிச் செய்தால் மட்டுமே நாம் பரலோகம் செல்ல முடியும். ''ஒன்றான மெய்த் தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்'' (யோவா. 17:3). அன்பின் தேவன் முடியாத ஒன்றை (நம்மிடத்தில்) கேட்பதில்லை, மற்றும் அவரது வேண்டுகோள்கள் பாரமானவைகளுமல்ல (1 யோவா. 5:3). நடைப் பயணம் செய்யும் ஒரு மனிதர், எளிமையானவராயிருந்தாலும் தேவனுடைய இரட்சிப்பின் அறிவைப் பெற வர முடியும் (ஏசா. 35:8). "ஆகையால், நீங்கள் மதியற்றவர் களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து கொள்ளுங்கள்" (எபே. 5:17).

## “ஏலோஹிம்” என்ற வார்த்தை

கிரேக்க வார்த்தையான *theos* என்பது “(நாம்) மன்றாடும் ஒருவர்” என்பதைக் குறிக்குமென்றால், ‘‘பயப்படத்தக்க ஒருவர்’’ அல்லது “பயபக்திக்குரிய ஒருவர்” என்று அர்த்தப்படும் *’elohim* என்ற எபிரெய வார்த்தையில் இதே விதமான ஒரு சிந்தனை உள்ளது.[2] இவ்விதமாக, *’elohim* என்ற வடிவமானது ஆராதிக்கத்தக்க ஒருவர் என்ற அர்த்தம் தர வருகின்றது. இருப்பினும், இந்த வார்த்தையானது இலக்கண ரீதியாகப் பன்மை வார்த்தையாகவும், யாத். 20:3ல் உள்ளது போல “தேவர்கள்’’ என்றும் நேரடியாக மொழிபெயர்க்கப்படுகின்றது: “என்னையன்றி உனக்கு வேறே [*’elohim*] தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.” மிகச் சரியாக இதே வடிவமானது ஆதி. 1:1லும் தோன்றுகிறது: “ஆதியிலே தேவன் [*’elohim*] வானத்தையும் பூமியையும் படைத்தார்.” இந்தப் பன்மை வடிவத்தின் காரணத்தினால், வேதாகமமானது பல தெய்வக் கொள்கையைப் போதிக்கின்றதென்று பலர் அதில் தவறு கூற நாடியுள்ளனர். அதன்படி இவர்கள் ஆதி. 1:1ஐப் பின்வருமாறு மொழிபெயர்ப்பார்கள்: “ஆதியிலே தேவர்கள் வானத்தையும் பூமியையும் படைத்தனர்.” வேதாகமத்தின் மற்ற வசனங்கள் ஒரே ஒரு மெய்யான தேவனே இருக்கின்றார் (உபா. 6:4; 1 கொரி. 8:6) என்று வலியுறுத்திக் காண்பிப்பதால், எந்தக் கல்வியாளரும் ஆதி. 1:1ஐ “தேவர்கள்” என்ற வார்த்தையைக் கொண்டு மொழிபெயர்த்த தில்லை. ஆதி. 1:1 வசனமானது பல தேவர்களைப் போதிப்பதில்லை யென்றால், பிறகு ஏன் பன்மை வார்த்தையான *’elohim* என்பது அங்குள்ளது? பழங்காலத்தவர்கள் எண்ணிக்கைப் பன்மையுடன் கூடுதலாக ஒரு கம்பீரப் பன்மை அல்லது கனப்படுத்தும் பன்மை ஆகியவற்றைப் பயன்படுத்தினார் என்று புதைபொருள் ஆராய்ச்சியானது காண்பித்துள்ளது. ஆதி. 42:30ல் யோசேப்பின் சகோதரர்கள், “தேசத்துக்கு அதிபதியாய் [lords] இருக்கிறவன் ... எங்களோடே கடினமாய்ப் பேசினான்” என்று நேரடியாகக் கூறிய இடத்திலும் இந்தக் கனப்படுத்தும் பன்மைச் சொல் உள்ளது. மோசேயினால் எழுதப்பட்டபடி, “lords” என்ற வார்த்தை பன்மைச் சொல்லாக உள்ளது, ஆனால் சந்தர்ப்பப் பொருளானது யோசேப்பு என்ற ஒரே ஒரு மனிதரை மட்டுமே குறிப்பதாயிருக்க முடியும். இதன் விளைவாக, மொழிபெயர்ப்பாளர்கள் பன்மையை ஒருமையாக மாற்றி, இப்பதத்தை ‘‘தேசத்தின் அதிபதியானவன்’’ என்று மொழி பெயர்த்துள்ளனர்.

தேவனைக் குறிப்பதற்கு ஒருமை வார்த்தையானது (*’eloah*) வேத வசனங்களில் வெகு அரிதாகவே பயன்படுத்தப் பட்டுள்ளது, ஆனால் அதன் பன்மை வடிவமானது 2,570 முறைகள் உள்ளன. எனவே மொழி பெயர்ப்பாளர்கள் ஏன் ஆதி. 1:1ல் ஒருமை வடிவத்தைக் கொணர்ந்து, “God” என்பதைப் பெரிய எழுத்தில் இட்டனர் என்பது தெளிவாக உள்ளது. ஏதோ ஒரு தேவன் அல்லது பல தேவர்கள் இந்த அண்டத்தின் படைப்பாளர்களாய் இருப்பார்கள் என்று வேதாகமத்தின் எந்த ஒரு மாணவரும் கருதுவதில்லை.

## மூவர்கொண்ட

*’Elohim* என்ற பன்மை வடிவமானது இன்னொரு குறிப்பிடத்தக்க அர்த்தத்தையும் பெற்றிருக்கலாம். வேதாகம தேவத்துவம் ஒரு அலகாக (உபா. 6:4ல் *ehad*; 1 கொரி. 8:6ல் *heis*) இருந்தாலும், அவர் மூவர் கொண்ட தேவத்துவ அமைப்பாக இருக்கின்றார். ஆதி. 1:26ல் தேவன், ‘‘நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக’’ என்று கூறினார். வேதாகமத்தின் இரண்டாம் வசனமானது, தேவ ஆவியானவர் படைப்புப் பணியின் பாகமாயிருந்ததாகக் குறிப்பிடுகின்றது. இயேசு படைப்பில் ஒரு பாகம் கொண்டிருந்ததை மற்ற வசனங்களில் இருந்து (யோவா. 1:3; கொலோ. 1:16) நாம் அறிகின்றோம். எனவே தேவத்துவம் என்பது மூவர் கொண்ட அமைப்பாகும் என்பது தெளிவாய் உள்ளது. மூவர் எவ்விதம் ஒருவராய் இருக்க முடியும் மற்றும் ஒருவர் எவ்விதம் மூவராய் இருக்க முடியும் என்பவை வெளிப்படுத்தப்படாத விஷயங்களாகும் (உபா. 29:29), ஆனால் வேதாமத்தின் உண்மையானது வாதிடப்பட முடியாததாக உள்ளது.

## பிதாவாகிய தேவன்

“ஒரே ஆவியும் ... ஒரே கர்த்தரும் ... [மற்றும்] எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் ...” (எபே. 4:4-6) என்பவர்கள் சமாதானக் கட்டில் உள்ள சகோதர ஐக்கியத்தைக்காட்டிலும் அதிகம் விலையேறப் பெற்றவர்களாக, விசுவாசத்தின் சமர்ப்பிக்க இயலாத கூறுகளாக இருக்கின்றனர். இயேசு தாம் பிதா என்று உரிமைகோரவில்லை. (அவர் “நித்திய பிதா” என்ற ஏசா 9:6ல் உள்ள முன்னுரைத்தலானது சரியான முறையில் தருவிக்கப்படுகையில் அவருடைய காலமற்ற தன்மையைக் குறிப்பிடும் வகையில், “நித்தியத்தின் பிதா” என்று மட்டுமே உள்ளது.) இயேசுவின் புரிந்து கொள்ளுதலில் “பிதா” என்று அழைக்கப்படுபவர் இயேசுவிலிருந்து தனிப்பட்டவராக, இயேசு அவரை (பிதாவைச்) சார்ந்திருப்பவராக, இயேசு அவரை நோக்கி ஜெபித்தவராக இருந்தார். அவரது வேண்டுகோள்கள் (யோவா. 17:1ல் உள்ளது போல) ‘‘பிதாவே’’ என்று தொடங்கின, மற்றும் அவரது பிரசங்கங்கள், கேட்பவர்களுக்கு ‘‘உங்கள் பிதா’’ மற்றும் “பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா” (மத். 5:45, 48) என்று சுட்டிக்காட்டின. இந்த அண்டத்தின் தேவனை ‘‘எங்கள் பிதாவே’’ என்று (மத். 6:9) அழைக்கும்படி அவர் (இயேசு) தம்முடைய சீஷர்களுக்குப் போதித்தார். பெத்தானியாவின் கல்லறையில், ‘‘இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, பிதாவே நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவி கொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன் ...” (யோவா. 11:41, 42) என்று கூறினார்.

சிலுவையின் கடுந்துயரை நெருங்குகையில் இயேசு பதட்டமாயிருந்தார்: ‘‘இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது; நான் என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையினின்று என்னை இரட்சியும் என்று சொல்வேனா? ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்.

பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" (யோவா. 12:27, 28அ). தேவத்துவத்தில் இயேசு மட்டுமே இருக்கின்றார் என்ற தவறான கருத்தானது இயேசுவின் ஜெபத்திற்குப் பதில் அளித்த ஒரு குரலொலி யினால் - வானத்திலிருந்து உண்டான ஒரு குரலொலியினால் - தெளிவாக மறுக்கப்படுகின்றது: "மகிமைப் படுத்தினேன், இன்னமும் மகிமைப் படுத்துவேன்" (யோவா. 12:28ஆ). அங்கே நின்று கொண்டிருந்தவர்களில் சிலர் தாங்கள் ஒரு இடிமுழுக்கத்தைக் கேட்டதாக நினைத்தார்கள், மற்ற சிலர் தேவதூதன் இயேசுவுடன் பேசியதாக நினைத்தார்கள். இந்த முழு நிகழ்ச்சியும், தேவத்துவத்தில் இரு நபர்களுக்கு/இரு உறுப்பினர்களுக்கு இடையிலான செய்தித் தொடர்பைக் காண்பிக்கின்றது.

தகப்பன் என்பதற்கான அரமாயிக் வார்த்தையான Abba என்ற பதத்தில் நெருங்கிய தொடர்பு மற்றும் வழக்கத்திற்கு மாறான நெருக்கம் ஆகியவற்றின் உணர்வொன்றைக் காண சிலர் முயற்சி செய்திருக்கின்றனர். இருப்பினும், கிரேக்க மொழியில் *pater* என்ற சொல்லும், ஆங்கிலத்தில் "father" என்ற சொல்லும் கொண்டுள்ள இதே அர்த்தத்தையே *Abba* என்ற வார்த்தை வடிவமானது அரமாயிக் மொழியில் மிகச் சரியாகக் கொண்டுள்ளது. இயேசு கெத்சமெனேயில் தம்முடைய ஜெபத்தில் அரமாயிக் மற்றும் கிரேக்கம் ஆகிய இரு வார்த்தை வடிவங்களையும் பயன்படுத்தினார் என்பது தெளிவாகின்றது (மாற். 14:36). அவர் தம்மிலிருந்து தனிப்பட்டவராய் இருக்கும் ஒருவரிடத்தில், ஜீவனையும் மரணத்தையும் அதிகாரம் செலுத்துபவர் என்று தாம் எண்ணியிருந்த ஒருவரிடத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தார். அவர், தாம் "பிதா" என்று அழைத்தவர் பாவங்களை மன்னிக்க அதிகாரம் பெற்றிருந்ததாகவும் அவர் நம்பினார்; அவர் தம்மைக் கொலை செய்பவர்களுக்காகச் சிலுவையின் மீதிருந்து ஜெபித்தார்: "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று, அறியாதிருக்கிறார்களே" (லூக். 23:34). "குமாரனாகிய தேவனுக்கும்," "பரிசுத்த ஆவியானவராகிய தேவனுக்கும்" வேறொருவராகிய மிக மேலான "பிதாவாகிய தேவன்" இருக்கிறார் என்பது தெளிவு.

## குமாரனாகிய தேவன்

"நாம் மனுஷனை உண்டாக்குவோமாக" (ஆதி. 1:26) என்று பிதாவாகிய தேவன் கூறிய பொழுது, படைப்பின் செயலில் குமாரனாகிய தேவன் ஈடுபடுத்தப்பட்டார் என்று ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. தேவத்துவத் தின் இரண்டாம் நபரானவர் பழைய ஏற்பாட்டில் "கர்த்தருடைய தூதனானவர்" (ஆதி. 16:7; 22:15, 16; 31:11, 13; யாத். 3:2-4) என்று அறியப் படுவதாக விளக்கவுரையாளர்கள் பலர் நம்புகின்றனர். இருப்பினும், கர்த்தருடைய தூதனானவர் குமாரனாகிய தேவனாயிருந்தால், ஆராதிக்கப்படுவதை மறுத்திருக்க மாட்டார் (நியா. 13:16). இயேசுவைப் பொறுத்தமட்டில், பிதாவானவர், "தேவ தூதர் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக்கடவர்கள்" (எபி. 1:6) என்று கட்டளையிட்டார். கர்த்தருடைய

தூதனானவர் ஒரு முக்கியமான நபரேயாவார், ஆனால் அவர் தேவத்துவத்தின் இரண்டாம் நபரல்ல.

சூளையில் இருந்த நான்கு மனிதர்களைப் பற்றிய நேபுகாத் நேச்சாருடைய வார்த்தையை KJVயில் தரவழைத்த விதமானது ("... நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு [Son of God] ஒப்பாயிருக்கிறது"; தானி. 3:25) சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோருடன் இயேசு இருந்தார் என்று சிலர் நினைக்கக் காரணமாகின்றது. அவர் இருந்திருக்க வாய்ப்புண்டு; ஆனால் சொல்லர்த்தமான வார்த்தைகளில், "நாலாம் ஆளின் சாயல் தேவர்களின் புத்திரனைப் போலுள்ளது'' என்பதே ஆகும். இம்மொழி பெயர்ப்பானது நேபுகாத்நேச்சாரால் அறியப்பட்டவை களுடன் பொருந்துவதாயுள்ளது. புறதெய்வ வணக்கம் செய்கின்ற ஒரு அரசன் தேவத்துவத்தின் இரண்டாம் நபராகிய தேவ குமாரனை அறிந்திருந்தான் என்று கூறுவது அவ்வளவாகப் பொருந்தி வருவதில்லை.

இருப்பினும் தேவத்துவத்தின் இரண்டாம் நபரானவர் பழைய ஏற்பாட்டின் காலங்களில்/நாட்களில் செயல்பட்டார் என்பது தெளிவாய் உள்ளது. அவர் படைப்பாளராக மட்டுமின்றி, பிற்பாடு வனாந்தரத்தில் இஸ்ரவேலர்களுடன் இருந்தார், அவர்கள் பானம் பண்ணிய ஞானக் கன்மலையாகப் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டார் (1 கொரி. 10:4).

ஒரு வகையில், எல்லா மனிதர்களுமே தேவனுடைய குமாரர்களாகவே இருக்கின்றனர் (லூக். 3:38ஐக் காணவும்), மற்றும் தூதர்கள் தேவனுடைய குமாரர்களாகவே இருக்கின்றனர் (யோபு 1:6; 2:1); ஆனால் இயேசு தேவனு டைய ஒரே குமாரனாயிருக்கிறார் (சங். 2:7; யோவா. 1:18) என்பதில் ஒரு கருத்து உள்ளது. தம்முடைய வகையில் அவர் ஒரே ஒருவராக, தனிச் சிறந்தவராக இருக்கின்றார். சரீரப் பிரகாரமாக அவர் பரிசுத்த ஆவியான வரால் கன்னி மரியாளிடமிருந்து பிறந்தார் (லூக். 1:35), ஆனால் உணர்வெழுச்சியுள்ள ஒரு பிதாவின் மெய்சிலிர்க்கும் அனுபவமானது ("இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்"; சங். 2:7) பெத்லகேமில் பிறந்ததைக் குறிப்பதில்லை. அது இயேசுவின் உயிர்த்தெழுதல் மற்றும் அவர் அரசராக முடி சூட்டப்படுதல் மற்றும் ஆசாரியராக அபிஷேகம் பெறுதல் (அப். 13:33; எபி. 1:5; 5:5) ஆகியவற்றினால் பரலோகத்தின் சந்தோஷத்தினுடைய உருவகமான விளக்கமாயிருக்க வேண்டும் (இல்லத்தில் ஒரு பிறப்பு பற்றிய அறிவிப்பினால் ஏற்படும் சந்தோஷத்துடன் ஒப்பிடப்படக் கூடியது).

தேவத்துவத்தின் இரண்டாம் நபர் என்ற வகையில், அவர் ஒருக்காலும் சொல் அர்த்தமாக பெற்றெடுக்கப்படவில்லை. பெற்றெடுக்கப்பட்ட ஒரு குமாரன் ஒருக்காலும் தனது பிதாவின் வயதை ஒத்தவராயிருக்க முடியாது. இயேசு பெற்றெடுக்கப்பட்டவராயிருந்தால், அவர் முதலானவராயிருக்க முடிந்திராது (வெளி. 1:17). தேவன் படைத்தவற்றில் அவர் (இயேசு) முதலானவரல்ல ஆனால் அவரே (இயேசுவே) அதனை (படைப்பை) தொடக்கியவர் (வெளி. 3:14). அவர் தாமே ஆதியாக இருந்தார் (வெளி. 22:13). அவருக்கு முந்தியது எதுவுமில்லை, ஏனெனில் அவர் காலமற்ற வராயிருக்கிறார் (மீகா. 5:2; வெளி. 1:17). ஆகையால், உருவகக் கருத்தில் மட்டுமே இயேசு தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்படலாம். அவர்

தேவனுடைய குமாரன் என்ற கருத்தில் எல்லா மனிதர்களைக் காட்டிலும், எல்லாத் தூதர்களைக் காட்டிலும், மிகவும் மேன்மையானவராயிருக்கிறார் மற்றும் தெய்வீகத்தை விட எவ்வகையிலும் குறைவற்றவராயிருப்பதில்லை. அவர் பிதாவாகிய தேவன், ஆவியாகிய தேவன் ஆகியோரைக் காட்டிலும் தெய்வீகத்தில் எவ்வகையிலும் குறைந்தவராய் இருப்பதில்லை.

மெய்சிலிர்க்கும் இன்னொரு முன்னுரைத்தல் வசனிப்பில், பிதாவாகிய தேவன் கி.பி. 30ல் பெந்தெகொஸ்தே நாளில் தம்முடைய குமாரனின் முடி சூட்டுதல் நாளில் தாம் கூறப் போவதாயிருந்ததை எழுதினார்: "தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது" (சங். 45:6). பிதாவானவர் இயேசுவைத் தேவனென்று விவரித்தார், இது எபிரெயருக்கு (நிருபம்) எழுதியவரால் நிலை நிறுத்தப்படுகின்றது: "குமாரனை நோக்கி: தேவனே உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, ..." (எபி. 1:8). Revised Standard Version ஆனது சங். 45:6ஐப் பற்றிய தனது விளக்கத்தில் பிதாவானவர் இயேசுவை "தேவனே" என்று அழைப்பதை முற்றிலுமாக நீக்கியுள்ளது என்பது கவலைக்குரியதாகும்: ''உம்முடைய தெய்வீக சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது.'' RSVயானது இயேசுவுக்கு ஒரு தெய்வீக சிங்காசனத்தைத் தருகின்றது, ஆனால் அவருடைய தெய்வீகத்தை நீக்கிப்போடுகின்றது.

வரவிருந்த கிறிஸ்துவைப் பற்றிய இன்னொரு தீர்க்கதரிசனமானது (அதாவது அவர் ஒரு கன்னிகையிடம் பிறப்பார் என்பது; ஏசா. 7:14) அவரது தெய்வீகத்திற்கு இன்றியமையாததாக உள்ளது; ஏனெனில் அவர் கன்னிகையிடமிருந்து பிறவாதிருந்தால், அவர் நம்மைக்காட்டிலும் அதிகமாகத் தெய்வீகம் உடையவராயிருந்திருக்கமாட்டார். இதே தீர்க்கதரிசன வசனமானது அவருக்கு "இம்மானுவேல்" என்ற பெயரைக் கொடுக்கின்றது, இது இவரது விஷயத்தில் தெய்வீகத்தைப் பிரதிபலிக் கின்றது: "தேவன் நம்மோடிருக்கிறார்" (மத். 1:23). அழியக்கூடிய வெறும் மனிதர்களுக்கு ஏற்புடையதாயிராத, இயேசுவுக்கிருந்த மற்ற பெயர்கள், "அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு" (ஏசா. 9:6, 7).

மாம்சத்தில் வரவிருந்த தெய்வீகமானவரைப்பற்றி மீகாவால் இன்னொரு தீர்க்கதரிசனம் தரப்பட்டது. அவர், பெத்லகேமில் பிறக்க விருந்த ஒருவரைத் தரிசனமாய்க் கண்டார். ஆனால் அவ்வாறு பிறந்தவர் அங்கு தோற்றம் பெறவில்லை, ஆனால் அவரது புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையதாயிருந்தது (மீகா 5:2).

இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பது பற்றிய விரிவான ஆனால் உருவகமான விவரிப்பானது ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது (சங். 2:7). இயேசு முழுக்காட்டப்பட்டபோது, மீண்டும் மறுரூப மலையிலும் இதே பெயரானது (மற்றவர்கள்) கேட்கக் கூடிய வகையில் பிதாவினால் ஒலிக்கப் பட்டது (மத். 3:17; 17:5). தெய்வீகத்தின் அதே விசேஷித்த கருத்தில், சீஷர்கள் இயேசுவைக் கடலில் நடந்தவராகக் கண்ட பிறகு தேவகுமாரன் என்று அறிவித்தனர் (மத். 14:33). பிலிப்பி செசரியாவில் பேதுருவின் அறிக்கையும் கூட நாசரேத்தூரத் தச்சருக்குத் தெய்வீகத்தை

உரித்தாக்கிற்று (மத். 16:16).

யெகோவாவின் சாட்சிகள் இயேசுவை "ஒரு கடவுள்" என்ற நிலைக்குக் குறைத்து விட்ட ஒரு வசனப் பகுதியின் சரியான மொழிபெயர்ப்பானது (யோவா. 1:1) வேதாகமக் கல்வியாளர்களால் செய்யப்பட்டுள்ளது, அது இயேசு ''தேவனாக'' இருக்கின்றார் என்பதையே காண்பிக்கின்றது. திரித்துவத்தின் கருத்தைத் தவிர்ப்பதற்காகத் தவறாக வழி நடத்தப்பட்ட (அந்த) முயற்சியில் யெகோவா சாட்சிக்காரர்கள் பல தெய்வக் கோட்பாடுடையவர்களாகிவிட்டனர். இயேசுவை "தேவன்" என்பதில் இருந்து "ஒரு கடவுள்" என்பதாக்கிய அவர்களின் குறைவுச் செயலில் (இது மூல பாஷையாகிய கிரேக்கத்தின்படியானது என்பதாக அவர்கள் கூறுகின்றனர்), வசனம் 6லும் அதே நிலை கொண்டிருக்க அவர்கள் தவறி விட்டனர்; ஏனெனில் அதில், யோவான் ஸ்நானன் "ஒரு கடவுளிடம்" இருந்து அனுப்பப்பட்ட மனிதன் என்று மொழிபெயர்க்கத் துணியவில்லை (இவ்விடத்தில் கிரேக்க மொழியில் எவ்வித மாற்றமும் செய்யப் படாதுள்ளது). மற்றும், யோவா. 20:28ல், தோமா இயேசுவிடம் "என் ஆண்டவரே, என் ஒரு கடவுளே" என்று கூறியதாக ஆக்கவும் அவர்கள் தைரியமுள்ளவர்களாயினர் (இவ்விடத்தில் கிரேக்க மொழியில் முன்பு காணப்படுவது போலவே உள்ளது). அவர்கள் இயேசு "ஒரு கடவுள்'' மட்டுமே என்பதாக நம்புகின்றனர், ஆனால் தோமா அவ்விதம் எண்ணியதாக அவர்கள் உரிமைகோருவதில்லை.

எவரொருவரும் தன்னை தேவனுக்குச் சமமாக்குவதை இயேசுவின் எதிரிகள் மறுத்தனர் (யோவா. 5:18), ஆனால் இயேசு தேவனுக்குச் சமமாயிருப்பதாக உரிமை பாராட்டியது அவரைப் பொறுத்தமட்டில் ஏதோ கொள்ளையாடின பொருள் போல இருந்ததில்லை என்று பவுல் உறுதிப் படுத்தினார் (பிலி. 2:6). இந்தக் கருத்தில், இயேசு தாமும் பிதாவும் ஒன்றாயிருப்பதாகக் கூறியிருப்பார் (யோவா. 10:30). அவர்கள் ஒரே நபராயிருப்பதில் ஒன்றாயிருக்கவில்லை, ஆனால் இயேசு அவருடைய பிதாவைப் போன்றே தெய்வீக இயல்பு கொண்டிருப்பதில் பங்கெடுத்துக் கொண்டார்.

பிதாவோடு ஒன்றாயிருத்தல் என்று இயேசு உரிமைகோரிய கருத்தானது, அவரைக் கல்லெறிய விரும்பியவர்களால் தெளிவாய்ப் புரிந்து கொள்ளப்பட்டிருந்தது, ஏனெனில் அவர் தாம் "தேவன்" (யோவா. 10:33) ஆக இருப்பதாகக் கூறியதை அவர்கள் புரிந்து கொண்டனர். பூமிக்குரிய ஒரு மகன் தமது பிதாவின் மாம்சம் மற்றும் இரத்தத்திலிருந்த வருவது போலவே, இயேசு தம்முடைய பிதாவைப் போன்ற அதே இயல்புடையவராக (charakter tes hupostaseos autou; எபி. 1:3) - அவரது (பிதாவின்) பொருளடக்க மாதிரியாக இருந்தார்.

நான்காம் நூற்றாண்டில் ஆரியஸ் என்பவர், இயேசு தம்முடைய பிதாவைப் ''போல்'' (homoios) இருந்ததாக வாதிட்டார், ஆனால் அத்தனாசியஸ் அவர்கள், அவர் (இயேசு) உட்பொருளில் தம்முடைய பிதா"வாகவே'' (homnos) இருந்தார் என்ற கருத்தைப் பற்றியிருந்தார்.[3] தெய்வீகத்தின் முழுமையில் எந்தக் குறைபாட்டையும் இயேசு

கொண்டிருந்ததில்லை, ஏனெனில் தேவத்துவம் யாவும் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசம் பண்ணிற்று (கொலோ. 2:9).

## பரிசுத்த ஆவியானவராகிய தேவன்

இயல்பான/இயற்கையான படைப்பில், பிதாவாகிய தேவனும் குமாரனாகிய தேவனும் மட்டும் அல்ல, ஆனால் பரிசுத்த ஆவியாகிய தேவன் என்பவரும் பங்கேற்றார் (ஆதி. 1:2), அவர் பூமியின் தண்ணீரின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். இவர் உயிரின் படைப்பில் பங்கேற்றார் (சங். 104:30; யோபு 33:4). பரிசுத்த ஆவியானவர் இஸ்ரவேலின் மத்தியில் வாழ்ந்திருந்து, நியாயாதிபதிகளையும் தீர்க்கதரிசிகளையும் ஏவிக்கொண்டிருந்தார் (எண். 11:17, 25, 29; 2 சாமு. 23:2; ஆகாய் 2:5) ஆனால் இஸ்ரவேலர் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாகக் கலகம் செய்து, அவரைத் துக்கப்படுத்தினார்கள் (ஏசா. 63:10, 11). தாவீது தம்மை விட்டுப் பரிசுத்த ஆவியானவர் நீங்காதிருக்கும்படி ஜெபித்தார் (சங். 51:11).

இயேசு முழுக்காட்டப்பட்ட நாளில் அவர்மேல் பரிசுத்த ஆவியானவர் புறா வடிவில் வந்து இறங்கினார் (மத். 3:16); இவ்விதமாக இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரை முற்றான பூரணத்துவத்துடன் கொண்டிருந்தார் (யோவா. 3:34). “கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்” (லூக். 4:18; அப். 10:38ஐக் காணவும்) என்று அவர் கூறியுள்ள வகையில், அவரது பிரசங்கங்களும் மற்றும் இரக்கத்தின் செயல்களும் ஒரு வகையில் பரிசுத்த ஆவியானவராலேயே கூடிற்று.

இயேசு தாம் இந்த பூமியை விட்டுச் செல்வதை முன் எதிர்பார்த்து, தம்முடைய அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவியை வாக்குத்தத்தம் செய்த வேளையில், அவரை சத்திய ஆவியானவர் என்றும், இந்த உலகம் பெறக் கூடாத ஒரு தேற்றரவாளன் என்றும் விவரித்தார் (யோவா. 14:16, 17). அவர் அப்போஸ்தலர்களைச் சகல சத்தியத்திலும் வழி நடத்தி, இயேசு அவர்களுக்குப் போதித்திருந்தவைகளை நினைப்பூட்டி, வருங்காரியங்களை வெளிப்படுத்துபவராய் இருப்பார் (யோவா. 14:26; 16:13). ஆவியானவர் அவர்கள் மீது வருதலானது “முழுக்காட்டுதல்” (“ஞானஸ்நானம்” அப். 1:5ஆ) எனப்படும், மற்றும் அவரிடத்திலிருந்து அவர்கள் வல்லமை பெறுவார்கள் (வ. 8). அப்போஸ்தலர்களின் மூலமாக அவர் செய்யும் ஊழியமானது “ஆவிக்குரிய ஊழியம்” (2 கொரி. 3:8) எனப்படும். அவரைத் தூஷிப்பது மன்னிக்க முடியாததாக உள்ளது (மத். 12:32). தாவீதிற்குள்ளாக ஆவியானவர் வாசம் பண்ணினார் என்பதிலிருந்து சில விஷயங்களில் மாறுபட்ட வகையில் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்கள் ஆவியானவரைப் பெறுகின்றனர் (யோவா. 7:39; அப். 2:38; 5:32; கலா. 4:6).

ஆவிக்கு சரீரமும் எலும்புகளும் கிடையாது (லூக். 24:39), இருப்பினும் பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தின் மற்ற இரு உறுப்பினர் களிலிருந்து தனிப்பட்ட ஒரு சிந்தையைக் கொண்டுள்ளார் (ரோமர் 8:27). அவர் எல்லாவற்றையும் அறிகின்றார் (1 கொரி. 2:11), அவர் பேசவும், கேட்கவும், ஜெபிக்கவும் முடியும் (யோவா. 16:13; ரோமர் 8:26). அவர்

துக்கப்படுத்தப்பட முடியும் (எபே. 4:30). அவர் காலமற்ற வராயிருக்கிறார் (எபி. 9:14). அவரிடத்தில் பொய் சொல்லுதல் என்பது, தேவனிடம் பொய் சொல்லுதலாக உள்ளது (அப். 5:3, 4). தேவத்துவத்தில் உள்ள மற்ற உறுப்பினர்களை விட அவர் தெய்வீகத்தில் எவ்வகையிலும் குறைவற்ற வராகையால், தண்ணீர் ஞானஸ்நானமானது பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலும் பரிசுத்தப்படுத்தப் படுவதாக இயேசு குறிப்பிட்டார்:

> அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார் (மத். 28:18-20).

## உறவு

தேவத்துவத்தின் மூன்று உறுப்பினர்களுக்கிடையே உள்ள உறவு என்ன? பிதா குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி ஆகியோர் இயல்பில் - அதாவது தெய்வீகத்துவமாயிருப்பதில், தேவனாயிருப்பதில் ஒன்றாயிருப்பினும் - அவர்கள் அதிகாரத்தில் ஒன்றாயிருப்பதில்லை. இப்பொழுது, புதிய ஏற்பாட்டின் காலத்தில், கிறிஸ்து எல்லாவற்றையும் நிறைவாக்குகின்றார் (எபே. 1:23) மற்றும் அவர் எல்லாவற்றிலும் எல்லாமுமாயிருக்கிறார் (கொலோ. 3:11). அவரைக் கனவீனப் படுத்துவதென்பது பிதாவைக் கனவீனப்படுத்துவதாகும் (யோவா. 5:23); இருப்பினும் கிறிஸ்து பிதாவுக்குரியவராயிருக்கிறார் (1 கொரி. 3:23), மற்றும் பிதா அவரது தலையாய் இருக்கின்றார் (1 கொரி. 11:3). தேவன் இயேசுவைக் காட்டிலும் பெரியவராயிருக்கின்றார் (யோவா. 14:28); அவர் எல்லாரிலும் பெரியவராயிருக்கின்றார் (யோவா. 10:29) மற்றும் எல்லாருக்கும் மேலானவராயிருக்கின்றார் (எபே. 4:6). பரலோகத்தில் கிறிஸ்துவே அவருக்குக் கீழ்ப்பட்டிருந்த சகலத்தையும் அவருடைய அதிகாரத்திற்குக் கீழ்ப்படுத்துவார் (1 கொரி. 15:28).

பிதா மற்றும் கிறிஸ்து ஆகிய இருவரும் ஆவியானவரை இவ்வுலகத் திற்கு அனுப்பினர் (யோவா. 14:16; 15:26), மற்றும் அவர் செய்கின்ற யாவும் இயேசுவை மகிமைப் படுத்துகின்றதாயுள்ளது (யோவா. 16:14). எனவே பரிசுத்த ஆவியானவரிடம் ஜெபித்தல் என்பது ஏற்புடையதல்ல. இன்றைய நாட்களில் தேவனுடைய சித்தத்தினால் ஒவ்வொரு விஷயமும் குமாரனை நோக்கியே கவனம் செலுத்தப்படுகின்றன. பிதாவானவரே மிக உன்னத மான அதிகாரமுடையவராயிருக்கின்றார், ஆனால் கிறிஸ்துவின் யுகத்தில் கிறிஸ்துவைத் தமக்கும் மேலாக உயர்த்துதல் என்பது அவருடைய தற்காலிகமான சித்தமாய் உள்ளது. பிதாவானவர் தாமே நியாயந்

தீர்க்காமல், குமாரன் அதைச் செய்வதால் (யோவா. 5:22) இந்தச் சூழ்நிலையானது நியாயத்தீர்ப்பு முழுவதிலும் கூடத் தொடர்கின்றது. பின்பு காலமானது மீண்டும் காலமற்ற தன்மைக்கு இடம் விடுகையில், தெய்வீக ஏற்பாடானது (முதலாவது பிதா, இரண்டாவது குமாரன் மற்றும் மூன்றாவது பரிசுத்த ஆவியானவர்) மீண்டும் செயல்படுவதாயிருக்கும்.

குறிப்புகள்

[1]Richard C. Trench, *Synonyms of the New Testament* (London: N.p., 1880; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1978), 7. [2]William Gesenius, *A Hebrew and English Lexicon of the Old Testament,* trans. Edward Robinson, ed. Francis Brown, S. R. Driver, and Charles A. Briggs (Oxford: Clarendon Press, 1957), 43. [3]ஆரியஸ் மற்றும் அத்தனாசியஸ் ஆகியோர் கிறிஸ்துவின் இயல்பு பற்றி கருத்து வேறுபாடு கொண்டிருந்த சபைப் பிதாக்கள் ஆவர். கி.பி. 35ல் நீசியா கவுன்சிலானது, கிறிஸ்து கீழானவர், தேவனுடைய நித்திய மற்றும் தெய்வீக இயல்பைப் பகிர்ந்து கொள்ளாத படைப்புயிர் என்ற ஆரியனின் முறைப்படியாகக் கண்டனம் செய்தது.